Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 152

திங்கட்கிழமை
27 ஏப்ரல் 2026

சித்திரை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

**விரைவில் டிஜிட்டல் காப்புறுதி அட்டைகள்?**

விரிவு பக்கம்:-03

இன்று முதல்

## செம்மணிப் புதைகுழியில் அகழ்வுகள் மீள ஆரம்பம்!

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 27**

செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. »11

50 ஆயிரம் ரூபாவுக்கு

## பெண் குழந்தையை விற்ற தாய் உட்பட மூவர் கைது

### தர்மபுரத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

**கிளிநொச்சி, ஏப்.27**

சுமார் ஒன்றரை வயதுடைய பெண் குழந்தையை 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் குழந்தையின் தாய் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை »11

110 கோடி ரூபா பெறுமதியான

## போதைப்பொருளுடன் சிக்கிய தேரர்கள் குழு

### முழு நாட்டையும் அதிர வைத்த சம்பவம்

**கொழும்பு, ஏப்.27**

தாய்லாந்திலிருந்து சுமார் 110 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய குஷ் மற்றும் ஹஷிஷ் ரக போதைப்பொருள்களை நாட்டுக்குக் கடத்தி வந்த 22 தேரர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் »11



## வழிநடத்திய பிக்குவும் கைது

**கொழும்பு, ஏப்.27**

110 கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள 'குஷ்' மற்றும் 'ஹாஷ்' போதைப் பொருள்களுடன் 22 பிக்குகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பிக்குகள் குழுவைவழிநடத்தினார்என்றுகூறப்படும் தலைமைப் பிக்கு, கம்பஹாவின் மீகஹமுல்ல »11

## அநுர மற்றும் அருணவின் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை

### எதிர்க்கட்சிகள் தீவிர முயற்சி



**கொழும்பு, ஏப்.27**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரு பிரதான அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. »11

போதைப்பொருள்களுடன்

## யாழில் இரண்டு தினங்களில் 13 பேர் பொலிஸாரால் கைது

**யாழ்ப்பாணம், ஏப்.27**

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றும், நேற்றுமுன்தினமும் மேற்கொண்ட நடவடிக்கையில் போதைப்பொருள்களுடன் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

## பிரான்ஸ் பயணமானார் வூட்லர்

**கொழும்பு, ஏப்.27**

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான எஃப். யூ. வூட்லர் நேற்றுப் பிரான்ஸ் பயணமாகியுள்ளார்.

பிரான்சின் லியோன் »11

காணி உரிமை முரண்பாடு

## துப்பாக்கி நீட்டிய அர்ச்சுனா எம்.பி.; குடும்பப் பெண்ணுக்கு மறியல்

**யாழ்ப்பாணம், ஏப்.27**

நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய ஒரு வயதுக் குழந்தையின் தாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது ஒரு வயதுக் குழந்தை அவருடன் இருப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் பெரியவிளானில் உள்ள »11



"குரங்கு கையில
பூமாலையைக்
குடுத்தவையில தான்
முழுப்பிழையே தவிர
குரங்கில பிழை
சொல்லேலாது கண்டியளோ"

## 2025இல் ரூ. 38.7 பில்லியன் மின்சார சபைக்கு நட்டம்

### இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.27**

மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கடந்த ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு 38.7 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருளாதார ஆய்வு அறிக்கையில் இந்த »11

## சைபர் தாக்குதல்கள் அபாயப் பட்டியலில் இலங்கை

விரிவு பக்கம்:-03

## சுற்றிவளைப்பு 660பேர் கைது

விரிவு பக்கம்:-05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்கள் மனம் வென்ற தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4413 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 29 30 36 76 |
| விசேட எழுத்து | H |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1480 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 05 39 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0439 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 2 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2519 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 03 41 50 60 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6171 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 6 7 2 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2201 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 24 46 52 53 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0287 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 30 47 63 |

# எரிபொருள் இறக்குமதிச் செலவு மீண்டும் கணிசமாக அதிகரிப்பு!

## மத்திய வங்கி தகவல்

**கொழும்பு,ஏப்.27**

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் போர்ப்பதற்றங்கள் மற்றும் உலக சந்தையில் நிலவும் ஸ்திரமற்ற தன்மை காரணமாக, இந்த வருடத்தில் நாட்டின் எரிபொருள் இறக்குமதிச் செலவு கணிசமாக உயரும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.**

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் நெருக்கடிகள் காரணமாக, உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலைகள் உயர்மட்டத்தில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவில் எரிபொருள் இறக்குமதி பிரதான பங்கு வகிக்கின்றது. கடந்த 10 வருடங்களில், நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவில் சராசரியாக 20 சதவீதம் எரிபொருளுக்காகவே செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டில் கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியின் அளவு அதிகரித்த போதிலும், அதற்கான மொத்தச் செலவு வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், தற்போதைய நிலையில் மத்திய கிழக்குப் போர் சூழலினால் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக, 2026 மார்ச் மாதத்தில் சாதாரண விலைநிர்ணய பொறிமுறைக்கு அப்பாற்பட்டு, எரிபொருள் விலைகளைக் கணிசமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஒழுக்க விதிமுறைகள் மீறல் நடத்துநருக்குப் பணித்தடை

யாழ்ப்பாணம்,ஏப்.27

கடமை நேரத்தில் ஒழுக்கவிதிகளை மீறி, இலங்கை போக்குவரத்துச் சபை நடத்துநருடன் முரண்பட்ட, தனியார் பேருந்து நடத்துநருக்கு மறு அறிவித்தல் வரை பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் தலைவர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடமையிலிருந்த குறித்த தனியார் பேருந்து நடத்துநர் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து நடத்துநரை நோக்கித் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி, அநாகரிகமான முறையில் நடந்து கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் வடக்கு மாகாணத்தில் உள்ள எந்தவொரு பயணிகள் பேருந்திலும் நடத்துநராகப் பணியாற்றுவதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பயணிகளுடனும், ஏனைய போக்குவரத்துச் சேவையாளர்களுடனும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறான ஒழுக்கமீறல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகப் பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.என்றார். (க-66)

# நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்தும் அரசு

## சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.27

திறைசேரி நிதிமோசடி மற்றும் நிலக்கரிக் கொள்வனவு விவகாரங்களில் அரசாங்கம் நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்திவருகின்றது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிதி முகாமைத்துவச் சட்டத்தின்கீழ் நாடாளுமன்றத்துக்கு வழங்கவேண்டிய அத்தியாவசியத் தகவல்களை வழங்காமல் அரசாங்கம் சட்டமீறல்களில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக திறைசேரியூடான கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இடம்பெற்றுள்ளது. இதற்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.

வெளிநாடுகளில் வசிக்கும் மற்றும் பங்குச் சந்தை மோசடிகளுடன் தொடர்புடைய நபர்களே இன்று நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றனர்.

கடந்த நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி வரவேண்டிய 25 நிலக்கரிக் கப்பல்களில் 15 மட்டுமே வந்துள்ளன.

மின்சாரத் தட்டுப்பாடு மற்றும் கோடிக்கணக்கான நஷ்டங்களை மறைக்கவே, 2009ஆம் ஆண்டு முதல் நடந்த பழைய விடயங்களை விசாரிப்பதாக அரசாங்கம் நாடகமாடுகிறது.

எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவதாலோ அல்லது பொலிஸாரைப் பயன்படுத்தி தர்மசங்கடத்திற்கு உள்ளாக்குவதாலோ எமது அரசியல் பயணத்தை நிறுத்தமுடியாது - என்றார். (ச-இ)



| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0879 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 7 4 5 4 6 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3145 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 36 39 57 62 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 12 35 51 60 |
| வெற்றி வாரம் | 5306 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0975 |
| வெற்றி இலக்கம் | 08 11 27 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 17 22 29 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4857 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 28 |
| வெற்றி இலக்கம் | 09 13 50 63 |
| வெற்றி வாரம் | 2321 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 26.04.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 11 33 57 70 |
| வெற்றி வாரம் | 2971 |

# வடக்குக் கல்வி அதிகாரிகள் மூவருக்கு ம. உரிமை ஆணைக்குழு அழைப்பு




யாழ்ப்பாணம்,ஏப்.27

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட சேவையின் தேவை கருதிய ஆசிரிய இடமாற்ற விவகாரத்தில், அடிப்படை உரிமை மீறப்பட்ட விவகாரம் தொடர்பில், வடமாகாண உயர் அதிகாரிகள் மூவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோருக்கு இந்த அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,-

பெயரிடப்பட்ட எதிர்வாதிகளுக்கு எதிராக, இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நாளை முற்பகல் 11 மணிக்கு விசாரணைக்கு எடுக்கப்படும். அதற்கமைய, தொடர்புடைய ஆவணங்களுடன் ஆணைக்குழுவில் மூவரும் முன்னிலையாகவேண்டும்- என்றுள்ளது. (க-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சைபர் தாக்குதல்கள் அபாயப்பட்டியலில் இலங்கை

கொழும்பு, ஏப்.27

**சைபர் தாக்குதல்களுக்கு உள்ளாகும் அதிக அபாயம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளதாக சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கையின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப நிபுணரான ஹர்ஷ விஜயவர்தன தெரிவிக்கையில், கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 91 இலட்சம் இணையத்தளங்களுக்கு சைபர் தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சில சமயங்களில் அரசியல் தேவைகளுக்காகவும் இன்னும் சில வேளைகளில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களாகவும் இவை இணையத்தில் பெருமளவில் இடம்பெறுகின்றன. கடந்த காலங்களில் இலங்கையின் முக்கியமான அரச இணையத்தளங்கள் சிலவற்றுக்கும் ஒரு வர்த்தக வங்கி, காப்பீட்டு நிறுவனம் மற்றும் முன்னணி ஆடைத் தொழிற்சாலை என்பவற்றுக்கும் இவ்வாறான பாதிப்புகள் ஏற்பட்டன. அண்மையில் நிதியமைச்சில் 2.5 மில்லியன் ரூபா அந்நியச்செலாவணி மோசடி செய்யப்பட்டதைப் போன்றதொரு சம்பவம் இதற்கு முன்னர் இடம்பெற்றதில்லை. இலங்கையிலுள்ள பல நிறுவனங்கள் மிக அதிக விலை கொடுத்துத் தரவுப் பாதுகாப்பு முறைமைகளைப் பெற்றுக்கொண்டபோதிலும் அவற்றைச் சரியான முறையில் செயற்படுத்தி அபாயங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சைபர் அபாயங்களைக் குறைப்பதற்கு வலுவான வேலைத்திட்டமொன்றைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது அத்தியாவசியமானது- என்றார். (ச-இ)

**கடந்தாண்டில்**

## வாகன இறக்குமதிச் செலவு 2 பில்லியன் டொலராகப் பதிவு

கொழும்பு,ஏப்.27

இலங்கையில் மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2025ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்கான செலவீனம் 2 பில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2025ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி கணிசமாக அதிகரித்துள்ளது. இது பல ஆண்டுகளாக நிலவிய கட்டுப்பாடுகளால் தேங்கியிருந்த கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது. தனிப்பட்ட மற்றும் வர்த்தக வாகனங்கள் ஆகிய இரு பிரிவுகளையும் உள்ளடக்கிய வாகன இறக்குமதி செலவு 2.04 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

## பஸ்கள் விபத்து 11 பேர் காயம்!

கொழும்பு,ஏப்.27

தம்புள்ள- மாத்தளை பிரதான வீதியின் நாவுல, நாலந்த பகுதியில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்றுக் காலை நடந்துள்ளது.

தனியார் பேருந்து ஒன்றும், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. சம்பவம் தொடர்பாகத் தனியார் பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைப் பேருந்தின் சாரதி தப்பியோடியுள்ளார். விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## போதைப்பொருளுடன் குருநகர் வாசி கைது



யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டில், குருநகரைச் சேர்ந்த நபரொருவர், நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்ச்சியாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருவதாகப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில், குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் 2 கிராம் 35 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு-20-27)

## டிஜிற்றல் வாகனக் காப்புறுதி மே மாதம் நடைமுறை

கொழும்பு,ஏப்.27

டிஜிற்றல் வாகனக் காப்புறுதி அட்டைகளைப் பயன்பாட்டுக்கு விடுவிக்கும் நடவடிக்கை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிச் சங்கம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் இலகுவான, காகிதமற்ற மற்றும் வினைத்திறனான அனுபவத்தை உறுதிசெய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் அட்டைகளுக்குப் பதிலாக டிஜிற்றல் முறையைப் பயன்படுத்துவதன்மூலம் சுற்றாடல் நிலைத்தன்மைக்கும் பங்களிப்புச் செய்யும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)




## காசுக்குப் பிள்ளை

பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் கல்லு எண்டு சொல்லுவினம். ஆனால் இந்தக் கலிகாலத்தில பெத்தமனம் தான் கல்லா மாறிக்கொண்டுபோகுது போல. அதை நிரூபிக்கிற மாதிரி கிளிநொச்சி தர்மபுரத்தில ஒரு சம்பவம் நடந்திருக்குது. கொஞ்சநாளைக்கு முதல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் பொம்பிளை தன்ர ரண்டு பிள்ளையளோட வந்து தருமபுரத்தைச் சேர்ந்த ஒருத்தரை ரண்டாந்தாரமாக் கட்டி, அங்கேயே குடியிருந்திருக்கிறா. ஊருக்குப் புதிசா ஆரும் வந்தா எல்லாரும் ஒருக்கா அவையைக் கூடுதலா நோட்டம் விடுறது வழக்கம் தானே. அப்பிடி இந்தக் குடும்பத்திலையும் ஊர்க்காரர் ஒரு கண் வைச்சபடி இருந்திருக்கினம். முந்தநாள் யாழ்ப்பாணத்துப் பொம்பிளையும், புருசனும், அவையின்ர ரண்டு பிள்ளையளும் தருமபுரத்தில இருந்து புன்னைநீராவிக்குப் போய் வந்திருக்கினம். போகேக்க ரண்டு பிள்ளையோட போனவை மூத்தபிள்ளையோட மட்டும் திரும்பி வந்தது ஊர்க்காரருக்கு ஒரு டவுட்டை கிளப்பியிருக்குது. 'சின்னப்பிள்ளை எங்க?' எண்டு அவை துருவித்துருவி கேக்க, 'எங்களுக்கு கஷ்டம் எண்டு அந்தப் பிள்ளையை ஒரு அம்மாவுக்கு குடுத்திட்டம்' எண்டு சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகு ஊர்க்காரர் பொலிஸூக்கு அறிவிச்சு, இவை பிள்ளையைக் குடுத்ததாச் சொன்ன வீட்டுக்குப் போயிருக்கினம்.

அங்க போன அவையின்ர ஒண்டரை வயதுக் குழந்தை விளையாடிக்கொண்டிருக்குது. அந்த வீட்டுக்காரிக்கு ஏற்கனவே அஞ்சு பெரியபிள்ளையள் இருக்கினம். அவாவும் ஊரில பெரிசா இருக்கிறேலை. கொழும்பில தான் அவா வேலை செய்யிறா. லீவில வீட்ட வந்து நிக்கேக்கதான் இந்தப் பொம்பிளைப் பிள்ளையை வாங்கியிருக்கிறா. 'அதுகள் தங்களுக்குக் கஷ்டம் எண்டு சொல்லி, இந்தக்குழந்தையை விக்கப்போறம் எண்டு கொண்டந்தவை. எனக்குக் குழந்தையைப் பாக்கப் பாவமாக் கிடந்தது. வேற ஆருக்கும் காசுக்குக் குடுத்து அந்தப் பிள்ளையின்ர வாழ்க்கை சீரழியக்கூடாது எண்ட நல்லெண்ணத்தில தான் நான் வளர்க்கிறன் எண்டு அம்பதாயிரத்துக்கு வாங்கினான். நான் கொழும்பில வேலை செய்தாலும் என்ர பிள்ளையள் இந்தக் குழந்தையை வளர்ப்பினம். அப்பிடி குழந்தையில பாவம் பார்த்ததால இப்ப பொலிஸ், கேஸ் எண்டு அலையவேண்டி இருக்கு' எண்டு அந்த வீட்டுக்காரி பொலிஸூக்குச் சொல்லியிருக்கிறா. ஆனாலும் பொலிஸ் பிள்ளையை வித்த புருசன், பெஞ்சாதியையும், அந்தக் குழந்தையை அம்பதாயிரத்துக்கு வாங்கின வீட்டுக்காரியையும் அரஸ்ட் பண்ணியிருக்கினம்.

பொலிஸ் விசாரிக்கேக்க, அந்தப் பிள்ளையின்ர தாய் பெரியதொரு குண்டைத் தூக்கிப்போட்டிருக்கிறா. 'அது என்ர பிள்ளை இல்லை. என்ர அக்கான்ர பிள்ளை. எனக்கு அந்தப் பிள்ளையை வளர்க்கக் கஷ்டம்.அதால தான் எங்கையாவது பணக்கார வீடுகளில வளர்ந்தா நல்லா இருக்கும் எண்டு வித்தனான்' எண்டு அந்தப் பொம்பிளைப் பொலிஸ் விசாரணையில சொல்லி இருக்கிறா. ஆனால் அதைப் பொலிஸ் நம்பேலை. அவா தன்ர பிள்ளையைத்தான் இப்பிடி அக்கான்ர பிள்ளை எண்டு பொய் சொல்லுறா எண்டதுதான் ஊர்ச்சனத்தின்ர நிலைப்பாடும். டி.என்.ஏ. சோதினையில உண்மை என்னெண்டு தெரியவரும் தானே. இப்பிடி ஒண்டரை வயதுப் பிள்ளையை நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு காசுக்கு விக்கிற கொடுமையை எங்கை போய்ச் சொல்லியமுடிகிறது? எங்கட இனம் எங்க போய்க்கொண்டிருக்குது?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுகாதார விதிமுறைகள் மீறல் உணவகங்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

நெல்லியடிப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனைகளில் சுகாதார விதிமுறைகளை மீறிய உணவகங்கள் மற்றும் பலசரக்கு கடைகள் அடையாளம் காணப்பட்டன. இவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், குறித்த உணவகங்கள் மற்றும் கடைகளுக்குத் தண்டம் அறவிடப்பட்டது.

உணவகங்களில் உணவைக் கையாளுபவர் தொப்பி, மேலங்கி, கையுறை அணியாமல் உணவை கையாண்டமை மற்றும் உணவக நிலம் அழுக்காக பேணியமை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில், 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் வெதுப்பகம் ஒன்றில் பணிபுரிபவர் முகச்சவரம் செய்யாமலும், மேலங்கி, முகக்கவசம், கையுறை என்பவை இல்லாமல் மற்றும் உணவு பதனிடும் பகுதியின் சில பகுதிகள் அழுக்காக காணப்பட்ட நிலையில் அவற்றுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வெதுப்பக முகாமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதேவேளை பலசரக்கு கடைகளில் காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமைக்காக 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பிறிதொரு பலசரக்குக் கடையில் எலியின் எச்சம் இருக்கும் இடம் மற்றும் அழுக்கான இடத்தில் உணவு களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் போது உரிமையாளர் வருகை தராமையால், எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (க-422)

# மாகாணசபைத் தேர்தலுக்கான அடுத்தகட்ட நகர்வுகள் தாமதம்!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு,ஏப்.27**

**மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து சட்டமா அதிபரின் அறிக்கைக்காக ஆணைக்குழு காத்திருக்கின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒன்பது மாகாணசபைகளினதும் பதவிக்காலம் முடிவடைந்து நீண்டகாலமாகியுள்ள நிலையில், மக்களாட்சியை நிலைநாட்ட தேர்தலை விரைவாக நடத்துவது அவசியம்.

2017ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அறிக்கை தோற்கடிக்கப்பட்ட பின் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு, குறித்த காலப்பகுதிக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. அறிக்கை சமர்ப்பிக்கப்படாத நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து சட்ட ஏற்பாடுகள் ஏதும் தற்போதைய முறையில் குறிப்பிடப்படவில்லை. இந்த இக்கட்டான நிலை குறித்து நாடாளுமன்ற விசேட குழுவில் முன்னிலையான சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளிடம் வினவப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து சட்டமா அதிபரின் அந்த அறிக்கைக்காக ஆணைக்குழு தற்போது காத்திருக்கின்றது. எல்லை நிர்ணயப் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணப்பட்டால் மட்டுமே சிறந்த முறையில் தேர்தலை நடத்த முடியும். அரசாங்கம் இதற்கான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் பட்சத்தில், தேர்தல்கள் ஆணைக்குழு தனது முழுமையான பங்களிப்பை வழங்கும் - என்றார். (ச-இ)



# பாலிநகர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு விடுதியில்லை!

முல்லைத்தீவு,ஏப்.27

பாலிநகர் மாகா வித்தியாலயத்தில், வெளிமாவட்டத்திலிருந்து வருகைதரும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் தங்குவதற்கான விடுதிகள் இல்லாமையால் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது என்று பாடசலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

402 மாணவர்கள் கல்விகற்கும் குறித்த பாடசாலையில் 29ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். எனவே ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறையும் சீர் செய்ய வேண்டும். அதேவேளை 60ஆண்டுகள் பழமையான பிரதான மண்டபம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. குறித்த பிரதான மண்டபத்தைச் சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதவிர சுற்றுவேலியைச் சீரமைத்தல், பாடசாலைக்கட்டடங்களின் பாதிக்கப்பட்ட கூரைகளைச் சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இதுகுறித்த பாடசாலைக்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாடசாலையில் காணப்படும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் ஆராய்ந்தார். (க-246)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு மன்னாரில் தெளிவூட்டல் செயலமர்வு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட (PSA) வரைவு மற்றும் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அதனைத் தொடர்ந்து வந்த சட்டங்கள் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு, மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற செயலமர்வில், கடந்த காலங்களில் இந்தச் சட்டத்தால், இலங்கை மக்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டன.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி அல்வில் அமல்ராஜ் சட்ட நுணுக்கங்கள் மற்றும் அதன் சவால்கள் மற்றும் அதில் இருக்கும் ஏனைய விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்தார். மெசிடோ (MSEDO) நிறுவனத்தின் ஏற்பாட்டில், UNOPS திட்டத்தின் விருத்திக் கூட்டமைப்புகளின் (Viruththi) நிதி அனுசரணையில் இந்தச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. (க-56)

## வடக்குமாகாண

# இ.போ.ச. பஸ் சேவைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கை



யாழ்ப்பாணம்,ஏப்.27

வடக்குமாகாணத்தில் இலங்கைபோக்குவரத்துச்சபையால் முன்னெடுக்கப்படும் பேருந்துச் சேவைகளை ஒழுங்குபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்குப் பிராந்தியப் பொது முகாமையாளருக்கு எழுத்துமூலமான கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மன்னார் தோட்டவெளி வழித்தடம், வவுனியாவிலிருந்து ஓமந்தை வழித்தடம், குப்பிழானிலிருந்து யாழ்ப்பாணம் வழித்தடம் ஆகியவற்றில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் சீரற்ற போக்குவரத்து, காலதாமதமான சேவை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இதனையடுத்து சாலை முகாமையாளர்களுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது-என்றார். (க-66,27)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் இலகுநாதன் செந்தூரனின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## திட்டமும், தம்பட்டமும்..!

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை விரைவில் கைத்தொழில் மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றவாறாக வாக்குறுதி வழங்கியுள்ளார் தொழிற்றுறை மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் அனில் ஜெயந்த. தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷ சூரியப் பெரும, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்டோர் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆய்வுப் பணிகளை முன்னெடுத்திருந்தனர். நேற்றுமுன்தினமும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்ட பின்னணியிலேயே, அந்தத் தொழிற்சாலை மிக விரைவில் கைத்தொழில் மையமாக மாறும் என்ற தகவல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை தொடர்ந்தும் சிமெந்துத் தொழிற்சாலையாக இயங்க வைக்கமுடியாது எனும்போது, அதற்கான மாற்றுத் திட்டங்கள் அவசியப்படுகின்றன. ஆனால், மிகநீண்ட காலமாக இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளும், பூர்வாங்க நடவடிக்கைகளும் மட்டும்தான் இடம்பெறுகின்றனவே தவிர, ஆக்கபூர்வமான பணிகள் எவையும் இடம்பெற்றதாக எந்தத் தகவலும் இல்லை. வடக்கு மாகாணசபை முழுமையாக இயங்கு நிலையில் இருந்த காலங்களில், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை தொழில்நுட்பப் பூங்காவாக மாற்றும் திட்டத்தை கொழும்பில் தீவிர மாகப் பரிசீலித்தது. வடமாகாணசபையும்கூட சிமெந்துத் தொழிற்சாலையை மையப்படுத்தி பல விவாதங்களை நடத்தியுள்ளது.

அதற்குப் பின்னர், கோத்தாபயவின் காலத்திலும், ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மையப்படுத்தி பல்வேறுபட்ட முன்னெடுப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. எனினும் அந்த முன்னெடுப்புகளின் பலாபலன் என்பது பூச்சியம்தான். வருவார்கள், ஆய்வுகளை மேற்கொள்வார்கள், ஊடக வெளிகளில் பேசுபொருளாக மாறுவார்கள், செல்வார்கள். ஆக, அரசாங்கம் செயற்படுகின்றது, திட்டங்களை மேற்கொள்கின்றது, முதலீடுகளைச் செய்கிறது என்பதற்கான 'வெற்றுப் போர்வையாகவே' காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை கடந்த அரசாங்கங்கள் பயன்படுத்தின. இதன் தொடர்ச்சியாக, தற்போதைய அரசாங்கமும் அதே மனநிலையில்தான் செயற்படுகின்றதோ என்ற வலுவான சந்தேகம் மக்கள் மத்தியில் எழவே செய்கின்றது.


காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை என்பது ஒரு மாபெரும் வளம். அதை மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியவகையில் உடனடியாகச் செயற்பட வைக்கவேண்டியது மிகவும் அவசியம். எனவே, தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் கட்சிகள் மற்றும் முதலீட்டாளர்களை உள்ளீர்த்து, பரந்துபட்ட உரையாடல்மூலம் அங்கு விரைவான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்தச்சிமெந்துத் தொழிற்சாலையை மையமாக வைத்து பல்லாயிரம் குடும்பங்கள் நாடு முழுவதும் வாழ்ந்துள்ளன. பணியாளர்களுக்கு பிரத்தியேக பேருந்துச் சேவைகளை மேற்கொள்ளும் அளவுக்கு, வேலை வாய்ப்புகளை அள்ளி வழங்கிய அற்புத பொக்கிசம் அது. அதை, புதர் மண்டிப்போக விட்டுவிடாமல், அதன் மகிமை மாறாமல் பயன்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு.



### பொய்யாமொழி

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்

**பொருள்:** ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.




## சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு புதிய தேசிய டிஜிற்றல் தளம்!

கொழும்பு,ஏப்.27

இலங்கையில் நடைபெறும் கலாசார, விளையாட்டு, கலை மற்றும் வணிக நிகழ்வுகள் குறித்த அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியவகையில் srilankaevents.lk என்ற உத்தியோகபூர்வ இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல்களை இலகுவாக வழங்கும்நோக்கில் இந்தத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் நடைபெறும் பிரதான திருவிழாகள் அல்லது விளையாட்டு நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து, அதற்கேற்பத் தங்களது பயணத்திட்டங்களை வடிவமைக்க இது உதவும். அத்துடன் உலகெங்கிலும் உள்ள மக்கள் இலங்கையின் கலாசார மற்றும் வணிகப் போக்குகளை உடனுக்குடன் இந்தத் தளம் ஊடாகத் தெரிந்துகொள்ளலாம். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையைத் தெற்காசியாவின் முன்னணி 'நிகழ்வு மையமாக' மாற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## சுற்றுலாவிகள் படையெடுப்பு

கொழும்பு,ஏப்.27

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 840,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதே வேளை, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 99,777 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## டிராக்டர் கவிழ்ந்து இளைஞர் பலி

கொழும்பு,ஏப்.27

உடப்புல்தெனிய, பஹலகம ஏரி அணையில் பயணித்த உழவு இயந்திரம் ஒன்று அணையில் இருந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர் கந்தளாய், வான்எல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

வயல் நிலங்களை உழுது முடித்துவிட்டு மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே, உழவு இயந்திரம் ஏரி அணையில் இருந்து கீழே கவிழ்ந்து விபத்து நேர்ந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ச-இ)

## சுற்றிவளைப்பு 660பேர் கைது

கொழும்பு,ஏப்.27

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டவிசேட சுற்றிவளைப்பின்போது, 660 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 234 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 90 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



## யானை தாக்கி முதியவர் பலி

கொழும்பு,ஏப்.27

மங்களகம, கொஹொம்பகஸ்தலாவ பகுதியில் யானை தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மங்களகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் 73 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டுக்கு அருகில் வந்த யானையை விரட்ட முயன்றபோதே யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

நாளை செவ்வாய்க்கிழமை- சித்திரை 15 28.04.2026 சுபநேரம் : 10.28 – 011.58 ராகுகாலம் : 02.58 – 04.28




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.27
நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பஞ்சமுக விநாயகர் உற்சவ பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.05 மணி முதல் முற்பகல் 11.05 வரையான நேரத்தில் இடம்பெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை கிரியைகள் ஆரம்பமாகும். மறுநாள் புதன்கிழமை பால்க் காப்பு, பால் அபிஷேகம்,யாகபூசை, ஹோமம், சர்வாஞ்சலிகும்பாபிஷேகம் இடம்பெற்று, சுவாமி வீதியுலா இடம்பெறும். (க)




பட்மின்ரன் போட்டியில்

## நல்லூர்ப் பிரதேச அணிகள் சம்பியன்


யாழ்ப்பாணம்,ஏப்.27
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன், யாழ் மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான பட்மின்ரன் போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலக அணிகள் இரு பிரிவுகளிலும் சம்பியன் கிண்ணத்தைத் தமதாக்கியுள்ளன. போட்டியின் இறுதியாட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. இதில் ஆண்களுக்கான போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், கரவெட்டிப் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றது. பெண்களுக்கான போட்டியில் நல்லூர்ப் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றது. (க-422)

பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு, பந்தல்கால் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 30 ஆம்திகதிவியாழக்கிழமை இரதோற்சவமும், முதலாம் திகதி சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும். (க-100)



## 20ஆவது ஆண்டு விழாவும் மாணவர் கௌரவிப்பும்

மன்னார்,ஏப்.27
யூசி மாஸ் (UCMAS) மன்னார்க் கிளையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் மாணவர் கௌரவிப்பு மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. யூசி மாஸ் மன்னார் நிறுவனத்தின் இயக்குநர் நடராஜா கேதீஸ்வரன் மற்றும் திருமதி யசோதா கேதீஸ்வரன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கை வங்கி மன்னார் கிளையின் முகாமையாளர் ஐ. அருளானந்தன் சோசை கலந்துகொண்டார்.



நிகழ்வில் கடந்த வருடம் ஜோர்ஜியாவில் நடைபெற்ற யூசிமாஸ் சர்வதேசமட்டப் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் யுசி மாஸ் மன்னார் மற்றும் முருங்கன் கிளையைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர். (க-56)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.27
நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது. மே மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்கினால் வெற்றி கிடைக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். காலையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக்கரையக்கூடும். குடும்பப் பெரியவர்களின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பிற்பகலுக்குமேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** இன்று புதிய முயற்சி எதிலும் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்களால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** காலையில் மனதில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் சோர்வு நீங்கி உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற சற்று அலைய வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மகரம்:** இன்று அனைத்து விஷயங்களிலும் பொறுமை மிகவும் அவசியம். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. மற்றவர்கள் கோபத்தில் பேசினாலும், நீங்கள் பொறுமையுடன் இருக்கவேண்டியது அவசியம்.

**கும்பம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





வலைப்பந்தாட்டத் தொடர்

# பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை இரு பிரிவுகளில் வெற்றிக்கிண்ணம்!

யாழ்ப்பாணம், ஏப்.27

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இரட்டைச் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளது. வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வதிரி திரு இருதயக் கல்லூரி மைதானத்தில் உற்சாகமாக நடைபெற்றது. 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 20:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. 20 வயதுக்குட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி போட்டியிட்டது.

ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 18:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மற்றுமொரு சம்பியனை தன் வசப்படுத்தியது. (ச-100)



சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம், வரவு ஆகியவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் நடத்தப்பட்டது. (ச-9)



கம்பர்மலை கலாவாணி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முன்பள்ளித் தலைவர் சி.தயானந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாவாணி சனசமூக நிலையத் தலைவர் வே.கஜேந்திரன், முன்பள்ளி ஆசிரியைகள், பெற்றோர், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-100)



# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.27

வண்ணை கோட்டையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தானம் அதிசுந்தர நூதன பஞ்சதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

காலை விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், மூலஸ்தான அபிஷேகம், யாகஹோமம் பூஜைகள், தீபாராதனை, இராக தாள வேத ஷோத்திர திருமுறைகள் பாராயணம், மஹா ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றன. முருகப்பெருமானுக்கு பிரதான வாசலில் அழகிய சிற்பங்களைக் கொண்ட அதியுன்னத அதிசுந்தர பஞ்சதவ மஹா இராஜகோபுரமும் அதனுடன் கலைநயம்மிக்க மணி மண்டபமும் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-41-20)

# மறைந்த நல்லை ஆதீனத்தின் உருவச்சிலை திறந்துவைப்பு!



யாழ்ப்பாணம், ஏப்.27

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின், அதன் மறைந்த இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் நினைவைப் போற்றும்வகையிலான குருபூசை நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை சித்திரை மாத திருவாதிரை நட்சத்திர நன்னாளில் இடம்பெற்றன. இதன்போது நல்லை ஆதீன முன்றலில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது குருமகா சந்நிதானத்தின் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டு, மலராஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நிகழ்வில் கலந்துகொண்டு, சந்நிதானத்தின் நினைவாகத் தொகுக்கப்பட்ட சிறப்பு மலரை வெளியிட்டுவைத்தார்.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், சின்மய மிஷன் முதல்வர் சிவேந்திர சைதன்யர், பொகவந்தலாவ ராகுல தேரர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண் முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் பங்கேற்றனர். (ச-66-17)

# யாழ்.நகரில் தாகசாந்தி

யாழ்ப்பாணம், ஏப்.27

தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலையில், யாழ்.நகரில் வீதிகளில் பயணிக்கும் மக்களுக்கு குளிர்பானம் வழங்கப்படுகின்றது.

கடும் வெப்பத்தால் மக்கள் பகல் வேளைகளிலும் தமது அன்றாடப் பணிகளை முன்னெடுக்கமுடியாது சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

இந்தநிலையில் பருத்தித்துறை நகரில் முன்னுதாரணமாக அண்மைய நாள்களாக மக்களுக்கு மோர் வழங்கப்படுகின்றது.

தற்போது யாழ்.நகரிலும் வீதிகளில் செல்வோருக்கு குளிர்பானம் வழங்கப்படுகின்றது. (க-17)



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 01 . 1943



மறைவு 26 . 04 . 2026

### தெய்வநாயகி பாலசுப்பிரமணியம் (ராணி)

இளவாலை சித்திரமொழியைப் பிறப்பிடமாகவும், 336 /24, ராஜா தியேட்டர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தெய்வநாயகி பாலசுப்பிரமணியம் நேற்று (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (பாலா) அன்பு மனைவியும், தமயந்தியின் (UK) அன்புத் தாயாரும், சிவரீதனின் மாமியாரும், சிவலோபா, ஜனனி, ஸ்ரீபன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், வேல்நாதன், விஜயலட்சுமி, தனலட்சுமி மற்றும் சண்முகநாதன் (மணி), சிவகுருநாதன் (குரு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அரியநாயகம், பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி, நடராஜா, நகுலேஸ்வரி மற்றும் தியாகராசா (ராசன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**336/24, ராஜா தியேட்டர் ஒழுங்கை,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 61321) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 11 . 1950



மறைவு 25 . 04 . 2026

### கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி (சின்னமணி)

அம்மன் வீதி மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசேஸ்வரி அவர்கள் (25.04.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கணபதிப்பிள்ளை (இ.போ.ச நடத்துநர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்து சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், குகதாசன் (ஆசிரிய ஆலோசகர் - கிளிநொச்சி தெற்கு வலயம்), ஜெயதாசன் (பிரான்ஸ்), கோகிலதாசன் (மாவீரர் உமாசுதன்), மோகனதாசன் (லண்டன்), குமுதினி (பிரான்ஸ்), கமலினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதிவதனி (சமுர்த்தி முகாமையாளர் - பளை), ரஜிதா (பிரான்ஸ்), விஜிதா (விசுவமடு), சிவரூபி (லண்டன்), ராஜன் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுர்ஜா, தனுர்ஜன், கோபிதாஸ், லக்கிதாஸ், சர்வின்தாஸ் (பிரான்ஸ்), யக்சினி (விசுவமடு), மோசிகன் (லண்டன்), பிருத்திகா, ஜீவன், வர்ணிகா (பிரான்ஸ்), அஸ்மிகா, பவிஸ்க்கன் (லண்டன்), கோபிதாஸ் லேயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அழகம்மா (மீசாலை), தவராசா (கனடா), கமலேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (மீசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் லீலாவதி (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற முத்து பொன்னையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிமலினி அவர்களின் பாசமிகு பெரியம்மாவும், கமலேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்), மயூரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

| | |
|---|---|
| ஜெயதாசன் | - 075 491 1561 |
| குகதாசன் | - 077 302 8606 |
| கமலினி | - +4475 6594 9564 |
| மோகனதாசன் | - +4477 4784 6664 |
| குமுதினி | - +3369 514 2785 |
| சதீஸ்குமார் | - 077 208 6848 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 7449) N-1

# அரசின் நிர்வாகச்சீர்கேட்டால் மக்கள் மீது புதிய வரிச்சுமை!

### ஹர்ஷண ராஜகருணா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.27

இந்த அரசாங்கத்தால் திறைசேரியில் உள்ள பணத்தைக்கூடப் பாதுகாத்துக் கொள்ளமுடியாமல் போயுள்ளது. இந்த நிதிமோசடி விவரங்களைப் பல மாதங்களாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்காமல் மறைத்திருப்பது மிகப்பெரிய சதியாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்திற்கு அனுபவம் இல்லை. வெறுப்புணர்வைப் பரப்பி மக்களை இவர்கள் ஏமாற்றினார்கள். அந்த ஏமாற்றத்தின் விளைவைத்தான் இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த அரசாங்கத்தால் திறைசேரியில் உள்ள பணத்தைக் கூடப் பாதுகாத்துக் கொள்ளமுடியாமல் போயுள்ளது. இதற்கு யார் பொறுப்பேற்பது என்று நாம் கேட்கிறோம். பல மாதங்களாக இந்தத் தகவலை அரசாங்கம் மறைத்து வைத்திருக்கிறது. நாடாளுமன்றம் என்பது நிதி தொடர்பான பொறுப்புள்ள ஒரு நிறுவனம். ஆனால் நாடாளுமன்றத்துக்கு இதுதொடர்பில் தெரிவிக்கப்படவில்லை. ஜனாதிபதியும் இதைத் தெரிந்துகொண்டுதான் மறைத்து வைத்திருந்தாரா? திருடப்பட்ட பணத்தை பல மாதங்கள் சென்ற பின்னர் எவ்வாறு மீளப் பெற முடியும்?

இந்த இழப்பை ஈடுசெய்யவே மக்கள் மீது புதிய வரிச்சுமை திணிக்கப்படுகின்றதா? -என்றார். (ச-இ)

## 1 ஆம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



கடந்த (08.05.2025) வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர்
### அப்பாப்பிள்ளை சிறிக்குமார்

அவர்களின் வீட்டுக் கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**7/3, பூநாறி லேன்,**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

(cs 61290) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஏப்.27
2026ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் நெடுந்தீவில் இன்று நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நெடுந்தீவுப் பிரதேச செயலர் ந.பிரபாகரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச மருத்துவ அதிகாரி திருமதி சஜிசயன் நிரோஷா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு கடற்படைக் கட்டளைத் தளபதி கப்டன் என். ரணவீர மற்றும் நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எல்.கே.கெட்டியாராச்சி, நெடுந்தீவு திருக்குடும்ப கன்னியர்மட முதல்வர் அருட்சகோதரி சுகிர்த செல்வி ஆயியோரும், கௌரவ விருந்தினர்களாக நெடுந்தீவு கத்தோலிக்க திரு அவை பங்குத் தந்தை அருட்பணி ப.பத்திநாதன், நெடுந்தீவு இந்துமத குரு பிரம்மஸ்ரீ க. புவனேந்திரசர்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-131)

## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்....

மலர்வு 15.06.1942



உதிர்வு 07.05.2024

**அமரர் கிட்டிணப்பிள்ளை நாகராசா**
திதி – சதுர்த்தசி

எங்கள் அன்பு குலதெய்வமே
பாசம் எனும் கயிற்றால் எம்
அனைவரையும் கட்டி அரவணைத்து முன்னேற்றி வைத்த
எமது தந்தையே!

விழுதுகள் நாம் விம்முகின்றோம் ஆண்டு இரண்டு ஆகியும்
ஆறவில்லை எம்மன விழிகளில் கண்ணீர் காயவில்லை
காலங்கள் கடந்தாலும் மாறாது உங்கள் நினைவலைகள்..

எங்கள் துன்பங்கள் அனைத்தையும் உங்கள் இதயத்துள் தாங்கி
உறக்கத்திலும் விழிப்பிலும் எம்மை கண்ணிமைபோல காத்து
ஒளிமிகுந்த வாழ்க்கை பாதையில் எம்மை இட்டு சென்ற தந்தையே!
இன்னும் நீங்கள் காட்டிய பாதையிலே
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடியே நாம்
வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் ஐயா...

என்றும் நீங்காத நினைவுகளுடன்...
பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(CS N-1

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06.11.1954 — இறப்பு 15.04.2019

**அமரர் பொன்னையா சிவராசசிங்கம்**
(ஓய்வு பெற்ற இ.போ.ச ஊழியர்)

ஏழாண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய்
வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.....

மீசாலை மேற்கு,
மீசாலை.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(cs.) (N.1)

# மரண அறிவித்தல்

## குலசிங்கம் சந்திரவதனா



பிறப்பு 24.12.1938 — இறப்பு 26.04.2026

சூராவத்தை ஊரிசாட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட குலசிங்கம் சந்திரவதனா அவர்கள் (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிறீதரன் (Swiss), சிறீறஞ்சனா (Swiden), தயாபரன் (USA), ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரணிரூபசிங்கம் (Canada) அவர்களின் அன்புச் சித்தியும், பகீரதி, பரமநாதன், கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும், மாதங்கி, மாதனன், பிரியந்தா, ரம்யந்தா, மிதுஷ், யனந்தனா, உபாசினி ஆகியோரின் ஆசைப் பேத்தியும், காலஞ்சென்ற ஞானசேகரம், சிவயோகம், கணேசலிங்கம் (மணியம்), திலவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காடகடம்பை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.61320) N-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# எதிர்கால வன்முறைகளுக்கு மறுக்கப்படும் நீதி வித்திடும்!

## சூ.யே.ஜீவரட்ணம் அடிகளார் சுட்டிக்காட்டு

**மன்னார், ஏப்.27**

**காலம் தாழ்த்தி வருகின்ற நீதியும், மறுக்கப்பட்ட நீதியும் இன்னுமொரு வன்முறை அரங்கேற மறைமுகமாக இடமளிக்கும் என்று அருட்பணி சூ.யே.ஜீவரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுக் குண்டு வெடிப்பின் நினைவு தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி கனகபுரம் சமாதான நல்லிணக்கப் பணியகம் விடுத்துள்ள ஊடகச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

முன்னொரு காலத்தில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் குருநகர் யாகப்பர் தேவாலயம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது முறையான நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால், உயிர்த்த ஞாயிறு போன்ற மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நாட்டில் மீண்டும் நிகழ வாய்ப்பில்லாமல் போயிருக்கும். மனிதம் எங்கே எல்லாம் மரிக்கின்றதோ, அங்கே இனம், மதம் மற்றும் மொழி கடந்து சிந்திக்கக்கூடிய காத்திரமான மனநிலைகள் உருவாக்கப்பட வேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் மரித்துப்போன உறவுகளின் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் சமாதான நல்லிணக்கப் பணியகம் பிரார்த்திப்பதோடு, உண்மையான சூத்திரதாரிகளுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-60)

# பூநகரி பொதுநூலகத்தால் நடமாடும் நூலக சேவை



பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பூநகரி பொது நூலகத்தால் நடமாடும் நூலக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பூநகரி போதிய போக்குவரத்து வசதியற்றதாகவும் பின்தங்கிய பிரதேசங்களாகவும் உள்ள நிலையில் கற்றல் செயற்பாடுகளிலும் பின்னடைவு காணப்படுகின்றது. மாணவர்களின் கற்றல் மற்றும் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் மாணவர்கள் நூலகத்துக்கு வருவதில் உள்ள போக்குவரத்து சிரமத்தைக் கருத்தில்கொண்டும் நடமாடும் நூலக சேவை பூநகரி பொது நூலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் சுழற்சி முறையில் நூலகத்தின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இச்சேவையை வழங்கும் நோக்குடன் உலக புத்தக தினமான கடந்த 23ஆம் திகதி பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. நடமாடும் நூலக சேவையின் கீழ் மாணவர்களுக்கான நூல்கள் எடுத்து செல்லப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் இலவச அங்கத்துவமும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. (எ-இ)

# கடல்கடந்திருப்பதால் நெடுந்தீவு புறக்கணிப்பு

## பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப்.27

நெடுந்தீவுப் பிரதேசம் கடல்கடந்து இருப்பதால், அனைத்து அபிவிருத்திகளிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அடிப்படைப் பிரச்சினைகள் இன்று உருவானதல்ல. இது நீண்ட காலமாகவே தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளாகும் என்று நெடுந்தீவுப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கக் கோரி மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் மக்களால் கையளிக்கப்பட்ட மனுவைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெடுந்தீவுப் பிரதேசம் ஒரு கடல் கடந்த பிரதேசமாகும். இந்தப் பகுதியில் நீண்டகாலமாகவே தீர்க்கப்படாமல் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான காரணம் கடல் கடந்து இருப்பது. அதுவும் இந்தப் பிரதேசம் ஒரு பின்தங்கிய பிரதேமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் போக்குவரத்துப் பிரச்சினையே முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. கல்வி வளப்பற்றாக்குறை, மருத்துவப் பற்றாக்குறை மற்றும் வீதிப்புனரமைப்பு, கடல் போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர் போன்ற பிரச்சினைகள் யாவும் தற்போது ஏற்பட்ட பிரச்சினைகள் அல்ல. இவை நீண்ட காலமாக உள்ளன. என்றார். (க-17)

## மரண அறிவித்தல்



**திருமதி**
**விக்கினேஸ்வரன் சகுந்தலாதேவி**

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்கினேஸ்வரன் சகுந்தலாதேவி அவர்கள் நேற்று (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை விக்கினேஸ்வரன் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் **J/266** உரும்பிராய் கிழக்கு) அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற மார்க்கண்டு - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் ஐந்தாவது புதல்வியாரும், காலஞ்சென்ற செல்லத்துரை - இரத்தினம் தம்பதியரின் மூத்த மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 2835 042**

CS 31687 A

## மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் கனகசபாபதி**

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசபாபதி அவர்கள் நேற்று (26.04.2026) அன்று சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களின் அன்பு மகனும் ஆறுமுகம் நாகம்மா அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நேசம் அவர்களின் அன்புக் கணவரும், சியாமளா (கல்விளான்குளம் மகாவித்தியாலம் - ஆசிரியர் சிவரஞ்சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி கல்லூரி - ஓய்வுபெற்ற ஆசிரியர்) சிவநந்நவர்மன் (கொழும்புத்துறை இந்து மாகா வித்தியாலாயம் ஆசிரியர் ). சிவநேசன் (உரிமையாளர் மாரியம்மன் ஸ்டோர்ஸ் சுன்னாகம்). சிவரஞ்சன் (பொதுச் சுகாதார பரிசோதகர் -வவுனியா).சத்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில்). அவர்களின் பாசமிகு தந்தையாரும் மற்றும் சிவபாலன் (உரிமையாளர் நல்லை குமரன் ஸ்டோர்ஸ் மல்லாவி) மதன் கனடா. கார்த்திகா (ஆசிரியர், ஜோன் பொஸ்கோ ) சோபனா. சிந்துமதி (மருந்தாளர் - வவுனியா). நிசாந்தன் (உரிமையாளர் - நியூ பெஷன் பார்க், சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். சுகிர்தன். இந்துப்பிரகாஸ். ஜிந்துயன். லக்சுதன். லக்ஹன் ஷரிசாந். பிரித்திகா. வியாஷ். அரிஷ். சச்சுதன். சித்தார்த். வேதிகா. ரியாசாந். ரித்திசாந் சங்கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2026) திங்கட்கிழமை ஒரு மணியளவில் சுன்னாகம் மயிலணியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனகிரியைகளிற்காக கொத்தியாலடி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 31662)A'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

செம்மணி மனிதப்புதைகுழியில் இது வரை இரு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 240 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் 239 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. அகழ்வு நடவடிக்கைகளில் சுமார் 40 சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் சிறுவர்கள், குழந்தைகளுடன் தொடர்புடைய பொருள்களும் மீட்கப்பட்டிருந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கை 45 நாள்கள் முன்னெடுக்கப்பட்டு, கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு 8 வாரக் காலப்பகுதி தேவை என சட்ட மருத்துவ அதிகாரி நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்த நிலையில், நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியிருந்தது.

ஆயினும் பருவமழை மற்றும் கால நிலை சீரின்மை காரணமாக மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கை தாமதப்பட்டிருந்த நிலையில், மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. அகழ்வு நடவடிக்கைகள் இன்று காலை நீதிமன்ற மேற்பார்வையுடன் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## போதைப் பொருளுடன்....

பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை 7 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீர்கொழும்பு மேலதிக நீதவான் சுபானி அபேசேகர நேற்று அனுமதி வழங்கினார்.

ஒவ்வொரு தேரரின் பயணப் பொதியிலும் பாடசாலை உபகரணங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களுக்கு நடுவே, சூட்சுமமான முறையில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேரரும் சுமார் 5 கிலோகிராம் போதைப்பொருளைத் தனித்தனியாகக் கொண்டு வந்துள்ளனர். தனியார் ஒருவரின் அனுசரணையில் கடந்த 22ஆம் திகதி தாய்லாந்து சென்ற இவர்கள், அங்கு அவர்கள் சாதாரண உடையில் பல்வேறு கேளிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் அவர்களின் கைபேசிகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலைய வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் தொகை ஒரே நாளில் கைப்பற்றப்பட்டதும், பௌத்த தேரர்கள் குழுவொன்று இவ்வாறு கைது செய்யப்பட்டதும் இதுவே முதலாவது சந்தர்ப்பம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை, புத்தர் பெருமானின் புனிதமான காவி உடையைத் தவறாகப் பயன்படுத்தி, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட போலியான பிக்குகள் குழுவினரின் சாசன விரோத மற்றும் சட்டவிரோதச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று மூன்று நிக்காயக்களின் மகாநாயக்க தேரர்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (அ-ச-இ)

## வழிநடத்திய...

பகுதியில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## யாழில்...

நேற்றுமுன்தினம் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், 2 பேர் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டனர்.

நேற்று 7 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 5 பேர் போதை மாத்திரைகளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், 2 பேர் ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## பிரான்ஸ்...

நகரில் சர்வதேச பொலிஸ் அமைப்பால் (இன்டர்போல்) ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மாநாடொன்றில் பங்கேற்பதற்காகவே அவர் பிரான்ஸ் சென்றுள்ளார்.

நாட்டில் அண்மையில் நிகழ்ந்த பேரழிவுகளின்போது, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக இலங்கை பொலிஸ் செயல்பட்ட விதம் தொடர்பில் அவர் சிறப்பு உரை ஒன்றையும் அங்கு ஆற்றவுள்ளார்.

ஒரு சர்வதேச பொலிஸ் மாநாட்டில் சிறப்பு சொற்பொழிவு ஆற்ற அழைக்கப்பட்ட முதலாவது இலங்கை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வூட்லர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## பெண்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் நடந்துள்ளது.

பெண் குழந்தையை விற்றனர் என்று கூறப்படும் பெண்ணும் அவரது கணவரும் மற்றும் குழந்தையை வாங்கியவருமே ஆகியோரே அந்தப் பகுதி மக்களால் பிடிக்கப்பட்டுத் தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தங்களுக்கு இரு குழந்தைகள் உள்ளன என்றும், குழந்தைகளை வளர்க்க முடியாத சூழ்நிலையில் ஒரு குழந்தையை விற்பனை செய்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர் என அறியமுடிகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இரண்டு வயது மதிக்கத்தக்க ஆண் குழந்தை ஒன்று உள்ள நிலையில், தற்போது விற்பனை செய்யப்பட்ட பெண் குழந்தை அவர்களுடையதா என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

அது தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-113)

## 2025இல்...

விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு பலமுறை மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருந்த நிலையில், 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதமும் மின்சாரக் கட்டணங்கள் சராசரியாக 20 வீதத்தால் குறைக்கப்பட்டன. 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிலவிய வறண்ட வானிலை காரணமாக நீர்மின் உற்பத்தி குறைந்து, அனல்மின் உற்பத்தி அதிகரித்தது. அதனால் மின்சார உற்பத்திச் செலவு கணிசமாக அதிகரித்தது.

இந்த நட்டத்தை ஈடுகட்ட 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் மின்சாரக் கட்டணங்கள் 15 வீதத்தால் உயர்த்தப்பட்டன. ஆனால் மின்சார சபையின் நிதிச் சுமையைக் குறைந்த இந்த உயர்வு போதுமானதாக இருக்கவில்லை என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் கடன் சுமையால் ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை காரணமாக இலங்கை மின்சார சபையின் கடன் மற்றும் பொறுப்புக்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. 2024ஆம் ஆண்டு இறுதியில் 174.3 பில்லியன் ரூபாவாக இருந்த குறுகியகாலக் கடன், 2025ஆம் ஆண்டு இறுதியில் 206.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. அதேகாலப்பகுதியில் நீண்டகாலப் பொறுப்புக்கள் 409 பில்லியன் ரூபாவில் இருந்து 411.2 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. எதிர்கால வருமான முன்னறிவிப்புக்கள் மற்றும் உற்பத்திச் செலவுகளைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வரும்வகையில் மின்சாரக் கட்டணங்களை மேலும் 10.3 வீதத்தால் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டது என்று இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நட்டங்களுக்கு மத்தியிலும் கடந்த ஆண்டு மின்சாரத்துக்கான தேவை 5.8 வீதத்தால் உயர்ந்துள்ளது. வீட்டுப் பாவனையாளர்களுக்கான மின் தேவை அதிகரித்துள்ளபோதும், ஆண்டு இறுதியில் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் மின்தேவையில் தற்காலிக வீழ்ச்சி காணப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## துப்பாக்கி...

காணி ஒன்று தொடர்பாக ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்தே நாடாளுமன்ற உறுப்பினர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

தனக்குச் சொந்தமானது என்று நாடாளுமன்ற உறுப்பினரால் குறிப்பிடப்படும் காணி தொடர்பில் பிறிதொரு தரப்பினரும் உரிமைகோரும் நிலையில், அந்தக் காணி தொடர்பான வழக்கு நீதிமன்றில் ஏற்கனவே நிலுவையில் உள்ளது என்று கூறப்படுகின்றது.

அந்தக் காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈடுபட்டபோது, மற்றைய தரப்பினர் அங்கு வந்ததை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களிலும் வெளியாகியிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினரும், மற்றைய தரப்பினரும் வாக்குவதத்தில் ஈடுபடும் காட்சிகளும், நாடாளுமன்ற உறுப்பினர் கையில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தவாறு வாக்குவாதத்தில் ஈடுபடும் காட்சியும் அந்தக் காணொலியில் பதிவாகியிருந்தது. நிலைமையைக் கட்டுப்படுத்த துப்பாக்கியை எடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் விளக்கமளித்துள்ளார்.

இந்த நிலையில் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டுக்கு அமைய பெண் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். எதிர்வரும் 29ஆம் திகதிவரை பெண்ணை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. பெண்ணுக்கு ஒரு வயதுக் குழந்தை ஒன்று உள்ள நிலையில், குழந்தையைத் தாயுடன் வைத்திருக்கவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (அ-எ-26-66)

## அநுர...

நிதி அமைச்சர் பொறுப்பில் உள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோருக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், நம்பிக்கையில்லா பிரேரணைகளைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளில் எதிர்க்கட்சிகள் மும்முரமாக உள்ளன என்று கூறப்படுகின்றது.

அரச திறைசேரியில் இருந்து 2.5 மில்லியன் டொலர், போலியான வெளிநாட்டு வங்கிக் கணக்கு ஒன்றுக்கு மாற்றப்பட்டது என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராகவும், ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பவம் நடந்தபோது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர கிழக்குக் கட்டளைப் பிரிவின் தளபதியாகக் கடமையாற்றிய போதும், தாக்குதலைத் தடுக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணைகளைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் ஒன்பதாம் நாள் பகல் உற்சவம் நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முத்துமாரி அம்மன் ஆதிசேச வாகனத்தில் எழுந்தருளி உள்வீதி சுற்றி, வெளி வீதி உலாவரும் காட்சி இடம்பெற்றது. (க-100)

## மத்திய கிழக்குப் போரை நிறுத்தக்கோரிப் போராட்டம்

கொழும்பு,ஏப்.27

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஈரானுக்கு எதிராக முன்னெடுத்துவரும் போரை உடனடியாக நிறுத்தக்கோரி, சோசலிச சமத்துவ கட்சியினால் ஆர்ப்பாட்டமொன்று ஹற்றனில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் ஆரம்பித்துள்ள இந்தப் போர், வெறும் மத்திய கிழக்குப் பிராந்தியப் போராக மட்டும் நின்றுவிடாமல், உலகளாவிய ரீதியில் நெருக்கடியாக விரிவடைவதற்கான அபாயம் காணப்படுகிறது. அணு ஆயுதப் போர் உருவானால், அது மனிதகுலத்துக்கு அழிவை ஏற்படுத்தும் ஒரு பயங்கரமான நிலைமையாக அமையும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர் (ச-இ)



## ஊடகவியலாளர்கள் இருவருக்கு பொன்னாலையில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

ஊடகவியலாளர்களான சி.செ.ரூபன் மற்றும் ம.ந.கடம்பேசுவரன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு, பொன்னாலை கண்ணபிரான் படிப்பகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஊடகவியலாளர் ரூபனின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் மற்றும் ஊடகவியலாளர் பண்டிதர் கடம்பேசுவரன் ஐயாவின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்வில் படிப்பகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-66)

## கலைஞர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இசைத்துறை சார்ந்த கலைஞர்களுடனான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் இசைத்துறை சார்ந்த அனைத்துக் கலைஞர்களையும் தவறாது குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

## சிறுமி துஷ்பிரயோகம் சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு,ஏப்.27

வாலஹேன பிரதேசத்தில் ஏழு வயதுச் சிறுமியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் 30 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## மனிதப் புதைகுழிகள் விவகாரத்துக்கு மக்கள் ஒத்துழைத்தால் தீர்வு கிட்டும்

### ஓ.எம்.பி. அலுவலகம் தெரிவிப்பு

மன்னார்,ஏப்.27

மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் விசாரணைகளைத் துரிதப்படுத்தி, விரைவாகத் தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் கனிஷ்க ஹேவாவிதான தெரிவித்தார். மன்னார் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது மனிதப் புதைகுழிகள் தொடர்பான 8 வழக்குகள் உள்ளன. அவற்றில் இரண்டு மன்னாரில் உள்ளன. 'திருக்கேதீஸ்வரம்' மற்றும் 'சதொச' என இரண்டு மனிதப் புதைகளில் இருந்தும் பெறப்பட்ட சான்றுகள் காபன் பரிசோதனைக்காக ப்ளோரிடாவுக்கு அனுப்பப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக அதற்குரிய வழக்கு விசாரணைகள் நடைபெற்று, மீள் பரிசோதனைக்காக மீண்டும் புளோரிடாவுக்கு அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தின் ஊடாக அந்தச் செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. அதேபோன்று முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனிதப் புதைகுழி வழக்குகளின்போது கண்டெடுக்கப்பட்ட சான்றுகளும், நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றன. புதைகுழி தொடர்பாக ஏதேனும் சான்றுகள் இருந்தால், எங்களிடம் சமர்ப்பிக்கும்படி நாம் மூன்று மொழிகளிலும் ஊடகங்களில் அறிவித்துள்ளோம். எனினும் பொதுமக்களிடமிருந்து அது தொடர்பில் எந்த ஒரு முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை .அதேபோன்று செம்மணிப் புதைகுழி தொடர்பாகவும் பொது மக்களின் ஆதரவு கேட்கப்பட்டுள்ள நிலையில், எந்த ஒரு தகவல்களும் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. போரின் வலிகளை நாங்களும் அறிந்தவர்கள். எங்களுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு நாங்கள் இந்த வேலைகளை செய்கின்ற போது சிவில் சமூகத்தினர் மற்றும் பொதுமக்களுடைய ஆதரவு எங்களுக்கு மிகவும் அவசியம். முடிந்தால் அதற்கான சான்றுகளை பிராந்திய அலுவலகத்தில் தெரிவிக்கலாம்-என்றார். (க-60)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- 1 1/2 பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- யாழ் பஸ் நிலையத்திலிருந்து **4 km** தூரம்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம், பின்பகுதி 10 லட்சம்.
- திருமண மண்டபம் அமைப்பதற்கும், கடைகள் கட்டுவதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.

**தொடர்பு:- 076 99 03 039 076 98 78 617**

(CS 31689) A

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.
- பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை

**தொடர்பு:- 077 6234 204**

(CS 31686) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் இல. 361 கஸ்தூரியார் வீதியில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org